[1979 ஏப்ரல் 2

திருக்கோயிலூர் வட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை

*வினா எண் 600 —திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோயிலூர் தாலுக்காவில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று அமைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் என்றால் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : (அ) இல்லை. ஆனால் உளுந்தூர்ப்பேட்டை தாலுக்கா பெரியசெவலை கிராமத்தில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை. முன்பு உளுந்தூர்ப்பேட்டை தாலுகா திருக்கோயிலூர் தாலுகாவின் கிளைத் தாலுகாவாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

சர்க்கரை விலை

*வினா எண் 601— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் ஒரு டன் சர்க்கரைக்கு உற்பத்தி செலவு எவ்வளவு ?

(ஆ) மத்திய அரசு நிர்யிணத்துள்ள விலை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : (அ) தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் ஒரு டன் சர்க்கரைக்கு உற்பத்தி செலவு சுமார் ரூ. 2,080-லிருந்து ரூ. 2,93 0வரை உள்ளது.

(ஆ) மத்திய அரசு சர்க்கரைக்கு இருந்த கட்டுப்பாடுகளை 16—8—1978 முதல் நீக்கிவிட்டது. எனவே தற்போது விலை ஏதும் நிர்ணயிக்கப்படுவதில்லை.

[முற்பகல் 9-30]

திரு. மு. அம்பிகாபதி : தமிழகத்தில் மட்டுமல்லாமல் இந்தியாவிலேயே சர்க்கரைத் தொழிலை அழித்துவிடும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது, ஒரு ஆலை என்றால் உற்பத்தி செய்கிற பொருளுக்கு விலை நிர்ணயம்